**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம்**
**சார்பு நீதிமன்றம், நாமக்கல்**
**முன்னிலை திருமதி.எஸ். தங்கமணி, எம்.ஏ., எம்.எல்.,**
**முன்னிலை அலுவலர்/சார்பு நீதிபதி, நாமக்கல்**
**2026– ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29ம் நாள் புதன்க்கிழமை**
**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை**
**முதலேற்பு மனு எண்.1290/2024**
**CNR No.TNNM1D–0026642024**

சேகர்(56), த/பெ.பரமசிவம்பிள்ளை (எ) பரமசிவம்,
க.எண்.2/37, நடுதெரு, அரூர்புதூர்,
அரூர், நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம். ... மனுதாரர்,

**/எதிராக/**

1.K.லட்சுமி, க/பெ.குமார்,
எண்.1, 54 68, கோணங்கிபட்டி,
வயலூர் அஞ்சல்,
கிருஷ்ணராயபுரம் வட்டம்,
கரூர் மாவட்டம்.
2. எம்.எஸ். மேக்மா HDI ஜெனரல் இன்சூரன்ஸ்
கம்பெனி லிமிட்டெட்,
Navin's Presidium,
3ம் தளம், என்.எம்.ரோடு,
பழைய எண்.103, புதிய எண்.17/19,
"B" பிளாக், நெல்சன் மாணிக்கம் ரோடு,
சென்னை. ... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது முதலில் நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு எம்.சி.ஓபி எண்.200/2024 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ROC No.56446/2020/G Dt.19.08.2024ன் உத்திரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக மாறுதலாக வரப்பெற்று எம்.சி.ஓபி எண்.1290/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனு என் முன்பு 28.07.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்ததில் இம்மனுவின் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மோகன்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்ட 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பரணிதரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்திரவு**

மனுதாரர் தனக்கு சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்டப் பிரிவு 166 ன் கீழ் கடந்த 19.09.2024 அன்று இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

| | |
|---|---|
| விபத்து நடைபெற்ற நாள் | 12.11.2023 |
| மனு தாக்கல் செய்த நாள் | 19.09.2024 |

2. **மனுவின் சுருக்கம்:**

விபத்தில் காயம்பட்ட மனுதாரர் சேகர் என்பவர் 56 வயது நிரம்பியவர். அவர் கோழி வண்டியில் லோடுமேனாக வேலை செய்து மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்ததாகவும், அவர் கடந்த 12.11.2023ம் தேதி மதியம் 12.30 மணியளவில் மோகனூர் – வளையப்பட்டி ரோடு, வளையப்பட்டி சந்தைமேடு, பழைய பஞ்சாயத்து ஆபிஸ் அருகே இடது புறம் ஓரமாக சைக்கிளை ஓட்டிச்சென்றுகொண்டிருந்தபோது, எதிர் திசையில் வந்த TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் தான் முழுகாரணம் ஆவார். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு தலை, காது மற்றும் உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டுவிட்டது. விபத்திற்கு பின்னிட்டு மனுதாரர்க்கு நாமக்கல் அட்சயா மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டும் பின்னர் மேல்சிகிச்சைக்காக அதே மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபத்து குறித்து மோகனூர் காவல் நிலைய குற்ற எண்.277/2023 இதச.பிரிவுகள். 279, 337ன் படி விபத்து ஏற்படுத்திய TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மேற்படி விபத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளால் மனுதாரர் விபத்திற்கு முன்பு செய்து கோழி வண்டியில் லோடுமேன் வேலையோ

அல்லது வேறு எந்த தொழிலையுமோ செய்து எந்த வகையிலும் வருமானம் ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு விபத்தினால் முழுமையான வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. மனுதாரரின் வருமான இழப்பு, வலி மற்றும் துன்பம் எதிர்கால வருமான இழப்பு, ஊட்ட சத்து உணவு, எதிர்கால மருத்துவ செலவு, போக்குவரத்து செலவு மற்றும் மன உளைச்சல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.20,00,000/- ஐ 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்ட 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**4. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது, இந்த எதிர்மனுதாரரால் எதிர்உரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல, மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் விபத்து நடைபெறவில்லை, மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை சாட்சியம் மற்றும் ஆவண ஆதாரங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும், சாலைவிதிகளை பின்பற்றியும் ஓட்டிச்சென்றுகொண்டிருந்தபோது, மனுதாரர் சாலையில் வாகனங்கள் வருவதை கவனிக்காமல் கவனக்குறைவாக சம்பவயிடத்தில் சாலையை குறுக்காக கடந்தபொழுது விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்திற்கு மனுதாரரின் கவனக்குறைவே முழுக்காரணம் ஆகும். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு எந்த வகையிலும் பொறுப்பல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. இது காப்பீட்டு விதிமுறை மீறலாகும். காவல்துறையினர் மேற்படி விபத்து வழக்கை புலன்விசாரணை செய்து மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக Mistake of fact என குறிப்பிட்டு குற்ற வழக்கை முடித்துள்ளார். மேலும் மனுதாரரின் தொழில், வயது, வருமானம், காயத்தின் தன்மை

மற்றும் சிகிச்சை விவரங்கள் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு சங்கதிகளை மறுத்தும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. **இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியவை**

| | |
|---|---|
| 1 | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2 | மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பானவர்கள் யார்? |
| 3 | மனுதாரருக்கு கிடைக்க கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு? |

**6. பிரச்சனை –1**

இரு தரப்பிலும் கற்றறிந்த வழக்கறிஞர்கள் அவரவர்கள் வழக்குரையின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிட்டார்கள். மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு அழைப்பாணையை பெற்றுக்கொண்ட 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரரின் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 12.11.2023ம் தேதி மதியம் 12.30 மணியளவில் மோகனூர் – வளையப்பட்டி ரோடு, வளையப்பட்டி சந்தைமேடு, பழைய பஞ்சாயத்து ஆபிஸ் அருகே இடது புறம் ஓரமாக சைக்கிளை ஓட்டிச் சென்றுகொண்டிருந்தபோது, எதிர் திசையில் வந்த TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் மேற்படி விபத்திற்கு TN 47 BW 5028

என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் தான் முழுகாரணம் ஆவார் என்று குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

விபத்து நடந்தவுடன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1ல் TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து வழக்கை காவல்துறையினர் புலன்விசாரணை செய்து TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் லோகேஷ் என்பவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக ம.சா.ஆ.6 குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. TN TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதும் மேற்படி இருசக்கர வாகனத்தை விபத்தின்போது லோகேஷ் என்பவர் ஓட்டிச்சென்றுள்ளார் என்பதும் ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலிருந்து தெரியவருகிறது. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் லோகேஷ் தன்மீதான குற்றச்சாட்டை நாமக்கல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் STC No.683/2024 என்ற வழக்கில் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு 06.06.2024 அன்று அபராதம் செலுத்தியுள்ளார் என்பது ம.சா.ஆ.9 லிருந்து தெரியவருகிறது.

2-ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் விபத்தானது மனுதாரர் சாலையில் வாகனங்கள் வருவதை கவனிக்காமல் சம்பவயிடத்தில் திடீரென சாலையை குறுக்காக கடந்தபோது விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்திற்கு மனுதாரரின் கவனக்குறைவே முழுக்காரணமாகும். 1ம் எதிர்மனுதார வாகன ஓட்டுநர் விபத்திற்கு எந்த வகையிலும் பொறுப்பல்ல. மனுதாரரே Tort feasor ஆவார். அதனால் 2-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் வாதம் முன்வைக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில் அதனை மறுத்தும் 1ம் எதிர்மனுதாரரின் TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் லோகேஷ் என்பவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 மற்றும் குற்ற இறுதியறிக்கை ம.சா.ஆ.6 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகன ஓட்டுநர்

லோகேஷ் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகையால் மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு தரக்கடமைப்பட்டவர் என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது விபத்து நடந்த நாள் இடம், வாகனம் ஓட்டுனர் ஆகியவைகளை பொருத்தவரையில் இருதரப்பினருக்கும் எவ்வித வேறுபாடுகளும் இல்லை. இருந்தபோதிலும் விபத்து நடந்த முறை தொடர்பாக வேறுபாடுகள் காணப்படுகிறது.

ம.சா.ஆ.1, ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.9 ஆகிய ஆவணங்கள் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1யை குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள். மனுதாரர் விபத்து குறித்தும், விபத்து நடந்த விதம் குறித்தும் முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியத்தை முரண்படுத்தும் விதமாக குறுக்கு விாரணையில் சங்கதிகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ம.சா.1ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.9 சான்றாவணங்களிலிருந்து 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகன ஓட்டுநர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனை முரண்படுத்தும் விதத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள், சம்பவ இடத்திற்கு அக்கம் பக்கத்திலுள்ள நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் லோகேஷ் தன்மீதான குற்றச்சாட்டை நாமக்கல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் STC No.683/2024 என்ற வழக்கில் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு 06.06.2024 அன்று அபராதம் செலுத்தியுள்ளார் என்பது ம.சா.ஆ.9 லிருந்து தெரியவருகிறது. எனவே மனுதாரர் தரப்பு ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியத்தின் அடிப்படையிலும் 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகன ஓட்டுநர் கவனக்குறைவால் மட்டுமே இந்த விபத்து ஏற்பட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**7. பிரச்சனை – 2**

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் TN 47 BW 5028 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 பாலிசி நகல் ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீடு 07.11.2020 முதல் 06.11.2025 வரை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விபத்து தேதியான 12.11.2023 அன்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீடு செயலில் உள்ளது தெரியவருகிறது. ஏற்கனவே விபத்தானது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டநர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பிரச்சனை 1ல் முடிவு செய்துள்ளதால் மனுதாரருக்கு வழங்கக்கூடிய மொத்த இழப்பீட்டுத்தொகையை 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் வழங்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8. பிரச்சனை –3**

விபத்து சமயத்தில் மனுதாரர் சேகர் வயது 56, கோழி வண்டியில் லோடுமேனாக வேலை செய்து மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். மனுதாரரின் தொழில் மற்றும் வருமானத்தை காண்பிக்கும் வகையில் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை. மனுதாரரின் காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விவரங்களை காண்பிக்கும் வகையில் ம.சா.ஆ.2 காயச்சான்று மற்றும் ம.சா.ஆ.12 விடுவிப்பு சான்றிதழ் அகியவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு நாமக்கல் ஸ்ரீ அக்ஷயா மருத்துவமனையில் 12.11.2023 முதல் 22.11.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளது ம.சா.ஆ.12 விடுவிப்பு சான்றிதழிலிருந்து தெரியவருகிறது. மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு தலை, இடது கால் மற்றும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளது மருத்துவ ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

மனுதாரர் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ செலவாக ரூ.1,63,731/– செய்ததாக குறிப்பிட்டு ம.சா.ஆ.11 ஆவணம் தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.11 ஆவணத்தினை பரிசீலனை செய்து பார்க்கும் போது

மனுதாரருக்கு **மருத்துவ செலவாக** ரூ.1,63,731/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது ஆகும்.

மனுதாரரின் ஊனம் பற்றி கணிப்பதற்கு மருத்துவக் குழு முன்பு ஆஜரானபோது 5% ஊனம் எனக் குறிப்பிட்டு ஊனச்சான்று வழுங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மருத்துவ குழுமத்தால் வழங்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்கிறது.

மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **C.M.A.No.3453 of 2024, dated 21.04.2024 Ramasamy Vs New India Assurance Co.Ltd and others** என்ற வழக்கில்

> In the instant case, the accident had taken place in the year 2022. However, the Tribunal., whle adopting the per percentage method, has fixed only a sum of Rs.5.000/- per percentage for granting compensation under the head 'disability'. As the year progress, the amount that is fixed per percentage must also increase considering the cost of living and therefore, this court is inclined to fix an amount of Rs.10,000/- per percentage.'

மனுதாரரின் வயது, தொழில், சிகிச்சை விவரங்கள், காயத்தின் தன்மை மற்றும் ஊனச்சான்றைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1 | மனுதாரரின் ஊனத்திற்காக 5X 10,000 | ரூ.50,000/- |
| 2 | வலி மற்றும் துன்பத்திற்காக | ரூ.30,000/- |
| 3 | ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ.5000/- |
| 4 | சிகிச்சை சமயத்தில் உடன் இருந்தோர் செலவாக | ரூ.5,000/- |
| 5 | வருமான இழப்பிற்காக | ரூ.25,000/- |
| 6 | விபத்தினால் ஏற்பட்ட வசதி குறைவு (Loss of Ameneties) | ரூ.20,000/- |
| 7 | ஆடை அணிகலனுக்காக | ரூ.2,000/- |
| 8 | மருத்துவமனை சென்று வந்த போக்குவரத்து செலவு | ரூ.10,000/- |
| 9 | மருத்துவ செலவு | ரூ.1,63,731/- |

| | | |
|---|---|---|
| | | |
| | மனுதாரருக்கு கிடைக்ககூடிய மொத்த இழப்பீட்டு தொகை | ரூ.3,10,731/- |

மனுதாரருக்கான ஒட்டுமொத்த இழப்பீட்டு தொகை ரூ.3,10,731/- ஐ 2ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

**முடிவாக மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,**

(1) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை ரூ.3,10,731/- ஐ 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்.

(2) மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5 % வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்.

(3) மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதுதல்ல.

(4) மேற்படி இழப்பீட்டுதொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான State Bank of India Account No.43360446669 ல் E-Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும்.

(5) 2ம் எதிர்மனுதாரர் அவ்வாறு செலுத்தி வைக்கும் இழப்பீட்டு தொகையை மனுதாரர் கணக்கு வைத்துள்ள வங்கியில் E-Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும்,

(6) மேற்படி தொகை முழுவதுமாக மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம்.

(7) வழக்கறிஞர் ஊதியம் ரூ.10,715/- அவரது வங்கி கணக்கிற்கு E-Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்

(8) மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்ற கட்டணம் ரூ.2,480/- ல் ஏற்கனவே செலுத்தியது போக எஞ்சியுள்ள நீதிமன்ற கட்டணத்தை இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.

**<u>மற்ற முக்கிய விவரங்கள்</u>**

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்த தேதி | 19.09.2024 |

| | |
|---|---|
| மனு உத்தரவான தேதி | 29.07.2026 |
| மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை | ரூ.20,00,000/- |
| மனுவில் உத்தரவான இழப்பீட்டுத்தொகை | ரூ.3,10,731/- |
| முழு நீதிமன்றக் கட்டணம் | ரூ.2,480/- |
| முன்னரே செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணம் | ரூ.20.00 |
| பாக்கி செலுத்தப்படவேண்டிய நீ.ம.கட்டணம் | ரூ.2,460/- |

**செலவுத்தொகைப் பட்டியல்**

| செலவு தொகை விபரம் | ரூ.பை. |
|---|---|
| இழப்பீட்டுத்தொகைக்குரிய முத்திரைக்கட்டணம் | 2,480.00 |
| வக்காலத்து | 10.00 |
| மனு தயாரிக்க | 200.00 |
| கட்டளை தயாரிக்க, சேர்ப்பிக்க | 50.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 10,715.00 |
| ஆதரவுகளுக்கான முத்திரை கட்டணம் | 60.00 |
| மொத்தம் | 13,515.00 |

என்னால் இந்த உத்திரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 29 தேதியன்று அவையறிய பகரப்பட்டது.

K THANGAMANI

Digitally signed by K THANGAMANI
Date: 2026.08.29 18:02:46 +0530

முன்னிலை அலுவலர்( சார்பு நீதிபதி)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்
நாமக்கல்

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 –சேகர்

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | காயச்சான்றிதழ் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.3 | காப்பீடு சான்றிதழ் |
| ம.சா.ஆ.4 | Police intimation |
| ம.சா.ஆ.5 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| ம.சா.ஆ.6 | இறுதி அறிக்கை |
| ம.சா.ஆ.7 | விபத்து பதிவேடு |
| ம.சா.ஆ.8 | மாதிரி வரைபடம் |
| ம.சா.ஆ.9 | அபராதம் செலுத்திய ரசீது |
| ம.சா.ஆ.10 | ஆதார் அட்டை |
| ம.சா.ஆ.11 | மருத்துவபில்கள் ரூ.1,63,731/- |
| ம.சா.ஆ.12 | டிஸ்சார்ஜ் சம்மரி |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

**நீதிமன்ற சான்றாவணம்**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | ஊனச்சான்றிதழ் |

குறிப்பு :

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழமண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட் எதிர் அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272 என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்திரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வரைய வேண்டியதில்லை என தீர்மானிக்கப்படுகிறது.

K THANGAMANI

Digitally signed by K THANGAMANI
Date: 2026.08.29 18:02:53 +0530

முன்னிலை அலுவலர்( சார்பு நீதிபதி)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்
நாமக்கல்

| | |
|---|---|
| | MCOP No.1290/2024<br>DATE: 29.07.2026<br>FAIR/DRAFT |

MCOP No.1290/2024
DATE:29.07.2026
மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,

(1) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை ரூ.3,10,731/- ஐ 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்.

(2) மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5 % வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்.

(3) மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதுதல்ல.

(4) மேற்படி இழப்பீட்டுதொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான State Bank of India Account No.43360446669 ல் E-Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும்.

(5) 2ம் எதிர்மனுதாரர் அவ்வாறு செலுத்தி வைக்கும் இழப்பீட்டு தொகையை மனுதாரர் கணக்கு வைத்துள்ள வங்கியில் E-Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும்,

(6) மேற்படி தொகை முழுவதுமாக மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம்.

(7) வழக்கறிஞர் ஊதியம் ரூ.10,715/- அவரது வங்கி கணக்கிற்கு E-Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்

(8) மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்ற கட்டணம் ரூ.2,480/- ல் ஏற்கனவே செலுத்தியது போக எஞ்சியுள்ள நீதிமன்ற கட்டணத்தை இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.

முன்னிலை அலுவலர்( சார்பு நீதிபதி)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்
நாமக்கல்